**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 127/2022**

**Deposition of Witnesses for PW2**

| Name | : | திரு.ஹிதயதுல்லா | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2025.

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

## முதல் விசாரணை

நான் தற்போது தொட்டியம் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.12.2021ம் தேதி மணப்பாறை காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சா விற்பதாக போன் தகவல் பெற்று நான் மற்றும் தங்கவேல் ராஜா என்பவர் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றார். சென்று பார்த்தபோது நாகராஜ் என்பவர் மஞ்சள் கை துணிப்பையில் கஞ்சா விற்றுக்கொண்டு இருந்தார். அவர் எங்களை கண்டதும் ஓட எத்தணித்தவரை மடக்கி பிடித்து விசாரித்தோம். உங்களை சோதனை செய்ய வேண்டும் நடுவர் நீதிமன்ற மூலம் சோதனை செய்ய வேண்டுமா என்று கேட்டதற்கு அவர் நீங்களே சோதனை செய்யலாம் வேறு எங்கு வேண்டாம் என்று சொன்னதன்பேரில், அவர் வைத்திருந்த மஞ்சள் நிற பையை சோதனை செய்தபோது மஞ்சள் பையில் 2 கிலோ கஞ்சா இருந்தது. அதில் 50 கிராம் எடுத்து பகுப்பாய்விற்காக அனுப்பி வைத்தோம். மீதமுள்ள 1.950 கிராம் கஞ்சாவை காக்கி கவரில் வைத்து மகஜரில் கைப்பற்றி நான், தங்கவேல் ராஜ் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பின்பு எதிரியை அழைத்து எதிரி மீது வழக்கு பதிவு செய்து காவல் அடைப்பு செய்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது விஏஓ, தலையாரியை அழைத்து கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. மகஜரை கையால் எழுதினார்களா டைப்

செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மஞ்சள் பை என்ன வகையான பை என்றால் துணிப்பை. ஆய்வாளர் மஞ்சள் பை எதையும் மகஜரில் கைப்பற்றினார். மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் 161(1) வாக்குமூலம் நான் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலம் ஆகும். எதிரி மகாலெட்சுமி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 12.00 மணி முதல் 13.00 மணி வரை பதிவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் ஆய்வாளருடன் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் எதிரிக்கு அவருக்குள்ள உரிமையை எடுத்து கூறியதாக சொல்வது பொய் என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மகஜரில் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.